அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 03/2025 (I)

எனதுஇலக்கம் : Pns/P4/W&OP/F11
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.11.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்/முப்படைத்தளபதிகள்/ பொலிஸ்மா அதிபர்
பிரதேச செயலாளர்கள்
உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள்

**அரசாங்க உத்தியோகத்தர்கள் விதவை/ தபுதாரன் மற்றும் அநாதை பிள்ளைகள் ஓய்வூதிய முறைமையில் பதிவு செய்தல் மற்றும் அவர்களின் பயனாளர்களின் தகவல்களை உறுதிப்படுத்தலை, புதிய நிகழ்நிலை தகவல் முறைமையினூடாக செயற்படுத்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக **2025.01.20** ஆந் திகதியிட்டு வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை **03/2025** இன் மீது உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன்.

**02**. அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நிகழ்நிலை தகவல் முறைமையின் ஊடாகப் பதிவு செய்தல், தகவல்களை இற்றைப்படுத்துதல் மற்றும் பயனாளிகளின் தகவல்களை உறுதிப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் **2025.05.20** ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்படல் வேண்டும் என மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**03.** அவ்வாறிருந்தபோதிலும், **2025.05.20** ஆந் திகதிக்கு முன்னர் அவ் நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியாதிருந்த அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்களைக் கருத்திற் கொண்டதன் பின்னர் புதிய நிகழ்நிலை தகவல் முறைமையில் பதிவு செய்தல், தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் பயனாளிகளின் தகவல்களை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லை **2026.02.28** ஆந் திகதி வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**04**. மேலும், அரச சேவைகளை சூட்டிகை சேவைகளாக மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் ஒருங்கிணைப்பை நோக்கமாகக் கொண்டு அக்ரஹார காப்புறுதி பிரதிபயன்களுக்கு உரித்துடைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களில் தங்கியுள்ளவர்களுக்கு அவ் பிரதிபயன்களை உரித்தாக்கும் போது உரிய அங்கத்துவத் தகவல்களை உறுதிப்படுத்துவதும் மேற்படி புதிய நிகழ்நிலை தகவல் முறைமையின் ஊடாகச் செய்வதற்காக புதிய அடையாளங்களை உறுதிப்படுத்தும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் இணைந்து

அறிமுகப்படுத்தியுள்ள புதிய அடையாளங்களை உறுதிப்படுத்தல் முறைமை **2025.08.15** ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**05**. இவ் புதிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அக்ரஹார பயனாளிகளின் அடையாளம் மற்றும் உரித்தினை உறுதிப்படுத்துதல் மேலே குறிப்பிடப்பட்ட புதிய நிகழ்நிலை முறைமையினூடாக மேற்கொள்ளப்படுவதினால் **2026.02.28** ஆந் திகதிக்கு முன்னர் முறைமையில் பதிவு செய்தல், தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் பயனாளிகளின் தகவல்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை செய்து நிறைவு செய்தல் வேண்டும்.

**06**. ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையின் **(Integrated Pensions Management System - "iPMS")** ஊடாக எதிர்காலத்தில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியர் மற்றும் அரச ஊழியர்களின் சமூகத்திற்கு வழங்கப்படும் அனைத்து டிஜிட்டல் சேவைகளைப் போன்றே ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்புபடும் வெளி நிறுவனங்களுக்கு அடையாள உறுதிப்படுத்தலுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் அடிப்படைத் தரவு முறைமையாகவும், விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய அங்கத்துவத்தை உரித்தாக்கும் இவ்முறைமை செயற்படுவதினால் உள்ளீடு செய்யப்படும் அனைத்து அங்கத்துவத் தரவுகளின் உண்மைத்தன்மை குறித்து குறிப்பிடத்தக்கதொரு கவனத்தை செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு வகைப்பார்த்தல் வேண்டும்.

**07.** மேலே **03, 04** மற்றும் **05** ஆம் பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்ட திருத்தங்களைத் தவிர அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை **03/2025** இன் ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றி காணப்படும்

*ஒப்பம்./* எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக ,மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

**பிரதிகள்** :

1. சனாதிபதிச் செயலாளர் - தகவலுக்காக
2. பிரதமரின் செயலாளர் - தகவலுக்காக
3. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - தகவலுக்காக
4. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக
5. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக
6. கணக்காய்வாளர் தலைமையதிபதி - தகவலுக்காக